[வலைப்பின்னல் மாற்றுமுறைÏ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 1999 ஆம் ஆண்டின் 39ஆம் இலக்க, மைத்திரிய புத்த தர்மதூத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

*(1999, ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*1999, திசெம்பர் மாதம் 03 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II **ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 7.75** **தபாற் செலவு: ரூபா 3.50**

**1999 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க மைத்திரிய புத்த தர்மதூத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*1999 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*]

*ச.வ. - ஓ. 48/97*

**மைத்திரிய புத்த தர்மதூத மன்றநத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

“மைத்திரிய புத்த தர்மதூத மன்றம்” என அறியப்படுவதும் அழைக்கப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டு நடாத்துவதற்குமென இதுவரை காலமும் தாபிக்கப்பட்டிருந்ததாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எக்குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை அது வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம் 1999 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, மைத்திரிய புத்த தர்மதூத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதியிலந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) மைத்திரிய புத்த தர்மதூத மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ளவர்களும், இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் “மைத்திரிய புத்த தர்மதூத மன்றம்” என்னும் பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக விருத்தல் வேண்டும், அத்துடன் அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடரலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும். மைத்திரிய புத்த தர்மதூத மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக்குறிக் கோள்கள்.

*3.* கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கையில் பொதுவில் புத்த தர்மம் சார்பான ஆன்மீகத்தையும் கலாச்சார பழக்கங்களையும் படிப்பினைகளையும் மேம்படுத்துதலும் பாதுகாத்தலும் அனுஷடித்தலும் அவற்றைப் போதித்தலும் ;

(ஆ) வழிபாட்டுச் சேவைகளை நடாத்தி புத்த தர்மத்தைப் போதிப்பதும் தேவைப்படும் அனுட்டானங்களைப் புரிவதன் மூலம் மைத்திரிய த்திரி ரத்னத்தைப் போதித்தலும் ;

(இ) புத்த தர்ம போதனைகளையும் இலங்கை யிலுள்ள மக்களின் பொருளாதார-சமூக விருத்தியை உண்டாக்குவனவும் வளர்ப்பனவுமான அத்தகைய நம்பிக்கையயும் பழக்கங்களையும் செயற்பாடுகளையும் கொண்டு நடத்துதலும் பொறுப்பேற்றலும் ;

(ஈ) வறுமையான நிலையிலுள்ள பின்ளைகளுக்கு நிதி உதவியும் புலமைப்பரிசில்கள் வழங்கலும், கல்வியை யும் அறிவையும் முன்னேற்றுவதற்கான, அத்தகைய வேறு வழிவகைகளின் மூலம் நிதியுதவி அல்லது வேறு நன்கொடைகள் வழங்குதல் உட்பட நூலகங்கள் , பண்பாட்டு நிலையங்கள் என்பவற்றைத் தாபித்தலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் அதே குறிக்கோள்களையுடைய வெளிநாட்டு அல்லது உள்நாட்டு நிறுவனம் அல்லது ஒழுங்கமைப்பு எதனுடனும் ஒத்துழைத்தலும் , ஒன்றிணைத்தலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக இலங்கையிலும் வெளியிலும் மாநடுகள் , கருத் தரங்குகள் , வேலைக்களங்கள் , கூட்டுக்கற்கைகள் , அத்துடன் விரிவுரைகள் என்பவற்றிக்கு ஆதரவளித்தலும் அவற்றை நடாத்துதலும் ;

(எ) கூட்டுத்தாபனம் அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் விரும்பத் தக்கவையெனக் கருதக்கூடிய புத்தகங்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள் , செய்தித்தாள்கள், அத்துடன் பருவவிதழ்கள் என்வவற்றை அச்சிடுதலும், வெளியிடுதலும், விநியோகித்தலும் ;

(ஏ) இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் தொழிற்பயிற்சி நிலையங் களைத் தாபித்தலும் பயிற்சிநெறிகளை நடாத்துதலும் அத்துடன்,

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் எய்துவதற்கு அவசியமானவாறாக, இடைநேர்விளைவாக அல்லது உகந்தவாறாக இருக்கக்கூடிய அத்தகைய எல்லாச் செயல்களையும் பணிகளையும் புரிதல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4.** இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவைறான அல்லது விரும்பத்தக்கவறான எத்தன்மையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் ,காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும்கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும், இத்தத்துவங்களுள் வங்கிக்கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், உள்ளூரிலும் வெளிநாடுகளிலுமுள்ள அரச,மாகாண அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங் களைக் கடன் வாங்கவும் அல்லது திரட்டவும், மானியக் கொடைகளையும், நன்கொடைகளையும் பெறவும், சேகரிக்கவும் அதன் நிதிகளை முதலீடு செய்யவும், தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலைநீக்கஞ்செய்தல் என்பவற்றுக்குமான தத்துவமும் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையப் பணிப்பாளர் சபையொன்றினால் நிருவகிக்கப் படுதல் வேண்டும், முகாதைுச்சபையின் கருமங்கள், அலுவல் களில் எதையேனும் ஆற்றுவதில் வேறு சபை அல்லது உபசபை ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சபைகளுக்குக் கையளிக்கும் அதிகாரமும் முகாமைச்சபைக்கு உண்டு.

(2) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தினத்திற்கு நேர்முந்திய தினத்தில் பதவிவகித்த, பணிப்பாளர் சபையே கூட்டுத்தாப னத்தின் முதலாவது பணிப்பாளர்சபையாதல் வேண்டும், புதிய முகாமைச் சபையைத் தெரிந்து நியமிக்கும் வரை பதவி வகித்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6**. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்கும் குறையாதோரின் வாக்குப் பெரும்தன்மை கொண்டும் உறுப்பினரைச் சேர்த்தல், அவர்கள் விலக்குதல் என்பற்றுக்காகவும் பணிப்பாளர் சபையின் பதவிதாங்குநர்களையும் உறுப்பினர்களையும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், வேலையாளர்கள் என்போரைத் தேர்ந்தெடுப்பதற்காகவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் கூட்ட அலுவல்கைளக் கையாள்வதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்கானதும் பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல் அதன் குறிக்கோள்களை எய்துதல் என்பனவற்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் ஒவ்வாதனவையாகவிராத விதிகளைக் கூட்டுத்தாபனம் காலத்திற்குக்காலம் ஆக்குதல், அதற்கு சட்டமுறையினதாதல் வேண்டும், அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும், அதைப்போன்ற கூட்டமொன்றில் அதேமுறையிலும் அவை மாற்றப்படலாம், திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம் அல்லது அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் எல்லா நேரங்களிலும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத் தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

(3) அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதி எதுவும் அல்லது இதன்பின்னர் நிறைவேற்றப்படக்கூடிய விதி எதுவும் கூட்டுத்தாபனத்தின் பொதுக்கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலொரு வாக்குப் பெரும்பான்மையினாலன்றி மாற்றப்படுதலோ, அதற்கு எதுவும் சேர்க்கப்படுதலோ, திருத்தப்படுதலோ அல்லது இல்லாதொழிக்கப்படுதலோ ஆகாது.

ஆயினும் எவ்வாறாயினும் அத்தகைய சேர்த்தல், திருத்தம் அல்லது இல்லாதொழித்தல் எதுவும் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டாலன்றி பயனுறுதல் ஆகாது.

(4) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய திகதியன்று வலுவிலுள்ள கழகத்தின் விதிகள், அவை இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் விதிகளுக்கு ஒவ்வாதனவாகவிராத வரையில் இப்பிரினிகீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகள்.

**7**. (1) கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்சபையால் கூட்டுத் தாபனத்தின் வரவு செலவினம் பற்றித் தகுந்த கணக்குள் வைத்தருக்கப்படச் செய்தல் வேண்டும்.

(2) நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, கைமாற்றங்கள் கொடை உதவுதொகை அல்லது கட்டணங்கள் என்பன மூலமாகக் கிடைக்கின்ற நிதி யாவும் கூட்டுத்தாபனத்தின் பெயரில் கூட்டுத்தாபனப் பணிப்பாளர்சபை தீர்பானிக்கக் கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை புனருத்தாபனம் செய்வதற்கும், முன்னேற்றுவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கு மாகக் கூட்டுத்தாபனம் ஏதேனும் தேய்மான நிதியத்தை, ஒதுக்கை அல்லது கடனாக நிதியத்தை உருவாக்கலாம்.

*கூட்டுத்தாபனம் இலாபம் அற்ற அமைப்பாக இருத்தல் வேண்டும்.*

**8.** (1) கூட்டுத்தாபனம் இலாபம் அற்ற அமைப்பாக அமைக்கப்பட்டு செயற்படுத்த வேண்டியதுடன், கூட்டுத்தாபனத்தின் பங்கிலாபம் அல்லது இலாபம் எனும் வகையில் ஏதும் இருப்பின் அதன் பாகம் எதுவும் கட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுதலும் கூடாது.

(2) கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதனது எல்லாக் கடன்களையும் பொறுப்புகளையும் திருப்தி செய்ததன் பின்னர், எத்தன்மையானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனங்கள் முக்கியமாக புண்ணிய காரியங்கள் சார்பாகவே தாபிக்கப்பட்டுள்ள அல்லது அமைந்திருக்கின்ற நிதியமொன்றின் அல்லது அமைப்பின் நலன்கருதி மட்டுமே ஒப்படைக்கப்படல் லேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**9.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும், கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக் கொடைகள் யாவும் பணிப்பாளர் சபை தீர்மானிக்கக் கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பத்திலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*மன்றத்தினால் செல்மதியாக வுள்ளவையும் அதற்குச் வுள்ளனவுமான கடன்கள்.*

**10.** இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு நேர்முந்திய தினத்தன்று மன்றத்துக்குரிய எல்லாக் கடன்களும், பொறுப்புகளும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் கொடுத்துத் தீர்ககப்படுதல் வேண்டுமென்பதுபதுடன், அத்தினத்தன்று மன்றத்துக்கு வருமதியாகவுள்ள கடன்கள், உதவுதொகைகள், ஒப்பப்பணங்கள் ஆகியன இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

**11.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக்கையளிப்பு அல்லது வேறு வகையாக கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்பட்க்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும் சட்டத்தில், முறைப்படி இயலுமானதாகவும் ஆற்றலுடையதாகவும் வேண்டும், அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையாளவுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற அதனங்களை வைத்திருக்கலாம்.

**12.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் பொதுச் செயலாளரின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் ஆகிய இருவர் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாதனமெதிலும் பொறிக்கப்படலாகாது, அவர்கள் தாங்கள் சமூகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தங்கள் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறேவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

குடியரசினதும் மறுபோரினதும் உரிமைகளைப் பேணல்.

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும்படசத்தில். சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**அட்டவணை** *(பிரிவு 5 (2))*

**பணிப்பாளர்கள் சபை**

| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் / தலைவர் | ஷாவோ, யூ ஷுங் |
| நிறைவேற்றுப்பணிப்பாளர் | எதிரிவீர பிரேமரத்ன |
| பணிப்பாளர்கள் | கங், ஹோ– லிங் |
| | பங் குவாங் – சிங் |
| | ஸெங், டிங்– லை |
| | லின், ஸன்–டெ |
| | ஸெம், பூ – சைவ |
| | வண. ஹல்வதுரே அஸ்ஸஜி தேரர் |
| | வண. கிதலகம பியதிஸ்ஸ தேரர் |
| | வண. கபுறுகமுவே மகாநாக தேரர் |
| | திரு. சுனில் உபயசிரி. |

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*